பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
06 08 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்–</u>

1. நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 165 சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
2. பிரதமரின் ஜன்தன் வங்கிக் கணக்குகளுக்கு குறைந்தபட்ச இருப்புத் தொகை பராமரிக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
3. மாநிலத்தின் வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான செயல் திட்டங்களை மாநில திட்டக்குழு பரிந்துரைக்க வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.
4. பெண்குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை மாநில அமைச்சர் திருமதி கீதாஜீவன் இன்று தொடங்கி வைத்தார்.
5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ----</u>

[]<<<>>>[]

நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 165 சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அமைச்சர், 2014-ஆம் ஆண்டு 76 ஜிஹாவாட்டாக இருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன், 2024-ஆம் ஆண்டு 203 ஜிஹாவாட்டாக அதிகரித்துள்ளது என்று கூறினார்.

உலக அளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் நான்காவது இடத்தில் இந்தியா உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் சுமார் ஏழு லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

நடப்பு ஆண்டு பட்ஜெட்டில் இந்த துறைக்கு 21 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், இதன்மூலம் மேற்கொள்ளப்படும் புதிய திட்டங்களால் அதிக வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் கூறினார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை மேம்படுத்துவதன் மூலம் பெட்ரோலிய எரிசக்தியை சார்ந்திருக்கும் நிலை மாறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம், பிரதமரின் சூரிய மின்சக்தி திட்டம் போன்றவற்றில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும் என்றும் திரு பிரல்ஹத் ஜோஷி கூறினார்.

[]<<<>>>[]

பிரதமரின் ஜன்தன் வங்கிக் கணக்குகளுக்கு குறைந்தபட்ச இருப்புத் தொகை பராமரிக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது அவர் இதைத் தெரிவீத்தார்.

நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி, நிதி மோசடி செய்வோர் மீது எவ்வித தயக்கமுமின்றி நடவடிக்கை எடுப்பதில் அரசு உறுதியுடன் இருப்பதாகக் கூறினார்.

நிதி மோசடியை தடுக்க ரிசர்வ் வங்கி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

பாதுகாப்பு தளவாடங்கள், விமானங்களுக்கான பாகங்கள், தானியங்கி மற்றும் உதிரி பாகங்கள், உயிரி தொழில்நுட்பம் உள்ளிட்ட 27 உற்பத்தித் துறைகள் மற்றும் சேவைகள் உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின் கீழ் வளர்ச்சி பெற்றுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் அவர் இன்று எழுத்து மூலமாக அளித்துள்ள பதிலில், உற்பத்தித்துறையை ஊக்குவிக்க கடந்த 2014-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட உற்பத்திக்கான இந்தியா இயக்கம் அதிக அளவில் முதலீடுகளை ஈர்த்து வளர்ச்சிக்கான கட்டமைப்பை உருவாக்கி தந்திருப்பதாகக் கூறியுள்ளார்.

புதிய கண்டுபிடிப்புகள் ஊக்கம் பெற்றிருப்பதாகவும் தெரிவித்துள்ள அவர், உலக அளவில் இந்தியாவை உற்பத்தி மையமாக உயர்த்துவதற்கு இந்த இயக்கம் பேருதவியாக இருந்தது என்றும் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

நாட்டின் முக்கிய துறைமுகங்கள் தனியார்மய மாக்கப்படவில்லை என்று மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலமாக அவர் அளித்த பதிலில், துறைமுகங்கள் மற்றம் தேசிய நீர்வழி தடங்களின் உரிமை அரசிடமே உள்ளதாகக் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் நீர்வழித் தடங்களில் சரக்கு போக்குவரத்து ஆறு மடங்கு உயர்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2023-24-ஆம் ஆண்டில் 133 மில்லியன் டன் சரக்கு போக்குவரத்து நீர்வழித் தடங்களில் நடைபெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மாநிலத்தின் வளர்ச்சிக்கும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் ஆக்கப்பூர்வமான செயல் திட்டங்களை மாநில திட்டக்குழு பரிந்துரைக்க வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற மாநில திட்டக்குழுவின் ஐந்தாவது கூட்டத்தில் பேசிய அவர், கல்வி, மருத்துவம், சுகாதாரம், சத்துணவு, மக்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான திட்டங்களை பரிந்துரைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அரசின் திட்டங்கள் மக்களுக்கு சென்றடைகிறதா என்பது குறித்து திட்டக்குழு அளித்த அறிக்கை பயனுள்ளதாக அமைந்துள்ளது என்று அவர் கூறினார்.

காலை உணவு திட்டம். மகளிர் உரிமைத்தொகை, பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லா பயணம், புதுமைப்பெண் திட்டம் போன்றவற்றால் மக்கள் அதிக அளவில் பயன்பெற்றிருப்பது தெரிய வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் தொழில் வளர்சசி, சமூக மாற்றம். கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் சமச்சீராக வளர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் பல புதிய திட்டங்களை மாநில திட்டக்குழு வகுத்துத் தர வேண்டுமென்றும் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் விழிப்புணர்வு மற்றும் முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு ஆகியவற்றுக்கான கையெழுத்து இயக்கத்தை மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் இன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

பெண்குழந்தைகளை காப்போம், பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தில் களப்பணியாற்றும் அலுவலர்களுக்கு சின்னம் அச்சிட்ட சீருடை வழங்கும் திட்டத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

பெண் குழந்தைகளின் கல்வி மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் குறித்த தகவல்களை அளிப்பதற்கான உதவி எண் 1098 ஆகியவை குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆயிரத்து 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

அஇஅதிமுக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கபபட்டுள்ளது.

சென்னையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் இக்கூட்டம் நடைபெறும் என்று அக்கட்சி இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மேட்டூர் அணையிலிருந்து கடந்த 28-ஆம் தேதி பாசனத்திற்காக திறந்துவிடப்பட்ட தண்ணீர் இன்று மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே மேலையூரில் காவிரி ஆற்றின் கடைசி கதவணையை வந்தடைந்தது.

பொதுப்பணித்துறை அதிகாரிகள், விவசாயிகள் மலர்தூவி தண்ணீரை வரவேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - மணிகண்டன் ) -40--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைபெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

காங்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) ---42 செகண்ட்*

**[]<<<>>>[]**

ராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் ஏழு கோடி ரூபாய் .செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் இன்று திறந்து வைத்தார்.

**[]<<<>>>[]**

தென்காசியில் புதிதாக கட்டப்பட்டு வரும் மாவட்ட நூலக கட்டிடத்தை இன்று பார்வையிட்ட மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்ட முதன்மை அலுவலகத்திலும் திடீர் ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

ராணிப்பேட்டை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காலக்கட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் அலுவலகத்தில் இன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகே 60 லட்சம் ரூபாய் கள்ள நோட்டுக்களை காவல்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர். இது தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் திருக்கோவிலில் ஆடிப்பூர தேர் திருவிழா நாளை நடைபெறுவதையொட்டி உற்சவர் மற்றும் மூலவருக்கு சாற்றுவதற்காக ஸ்ரீரங்கம் மற்றும் இதுரை அழகர் கோவிலிலிருந்து பாரம்பரிய முறைப்படி பரிவட்டங்கள் மற்றும் மங்கலப் பொருட்கள் கொண்டுவரப்பட்டன.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா நேரடியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இன்று நடைபெற்ற தகுதிச்சுற்றுப் போட்டியில் நீரஜ் சோப்ரா முதல் வாய்ப்பிலேயே 89 புள்ளி மூன்று நான்கு மீட்டர் தூரம் வீசி நேரடியாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார்.

மகளிர் மல்யுத்தப் போட்டியின் 50 கிலோ எடைப்பிரிவின் இந்தியாவின் வினேஷ் போகத் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஹாக்கி அரையிறுதி ஆட்டத்தில் இன்று இந்தியா – ஜெர்மனியை எதிர்கொள்கிறது. இப்போட்டி இரவு மணி 10-30-க்கு தொடங்குகிறது.

***<u>End of News</u>***